## சுருக்கம்

சிறுபான்மையினர் நலன் – முஸ்லீம் மகளிர் நலன் – சங்கங்கள் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப இணை மானியத் தொகையை இரண்டு மடங்காக உயர்த்தியும் உச்சவரம்பை ரூ.10 இலட்சத்தை ரூ.20 இலட்சமாக உயர்த்தியும் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

## பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (ட்டி1) த்துறை

அரசாணை (நிலை) எண்.109 நாள்: 08.10.2012.

படிக்க:

1. அரசாணை நிலை எண் 14, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 23.4.07
2. அரசாணை நிலை எண் 37, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 4.4.08
3. அரசாணை நிலை எண் 70, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 25.6.08
4. அரசாணை நிலை எண் 6, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 28.1.09
5. அரசாணை நிலை எண் 41, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 30.6.11
6. சிறுபான்மையினர் நல ஆணையரிடமிருந்து வரப்பெற்ற கடிதம் எண் பி.எம்2/775/12, நாள் 22.3.12 மற்றும் 15.5.2012

---

**ஆணை:**

பார்வை–1ல் படிக்கப்பட்ட அரசாணையில், சமுதாயத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள சிறுபான்மை சமுதாயத்தைச் சார்ந்த முஸ்லீம் மகளிருக்கு உதவும் வகையில் சென்னையில் மட்டும் செயல்பட்டு வரும் சங்கத்தினைப் போன்று தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் முஸ்லீம் மகளிர் உதவிச் சங்கங்கள் ஏற்படுத்த ஒப்புதலும், இச்சங்கங்கள் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப அரசின் உதவித் தொகையாக இணைத் தொகை வழங்கவும் பார்வை 2–ல் படிக்கப்பட்ட அரசாணையில் மேற்குறிப்பிட்ட சங்கங்கள் ஒவ்வொன்றிற்கும் இணைத் தொகையாக ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்தும் பார்வை–4ல் படிக்கப்பட்ட அரசாணையில் இச்சங்கங்கள் திரட்டும் நிதி ஆதாரத்திற்கு இணையாக அரசின் இணைத்தொகை அல்லது ரூ.10.00 இலட்சம் இவற்றில் எது குறைவோ அவற்றை வழங்கலாம் என்றும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் 9.5.2012 அன்று சட்ட மன்றப் பேரவை மானியக் கோரிக்கையின் போது " மாவட்ட முஸ்லீம் மகளிர் உதவும் சங்கங்கள் மூலம் திரட்டப்படும் நன்கொடை தொகைக்கு இணையாக அரசால் வழங்கப்படும் இணை மானியத் தொகையினை 1:1 என்பதற்கு பதிலாக 1:2 என்ற விகிதாசாரத்தில் உயர்த்தி வழங்கிடவும், இதற்கென ஆண்டொன்றிற்கு ரூ.3.20 கோடி செலவினம் மேற்கொள்ளப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

3. முஸ்லீம் மகளிர் உதவும் சங்கங்கள் மூலம் திரட்டப்படும் நன்கொடை தொகை ஆதரவற்ற முஸ்லீம் சமுதாய மக்களை உயர்த்தும் பொருட்டு அவர்கள் சுயமாக சிறுதொழில்கள் செய்திட, இலவச தையல் இயந்திரங்கள், மாவரைக்கும் இயந்திரங்கள், மருத்துவ உதவித் தொகை, விதவை மற்றும் முதியோர் உதவித் தொகை வழங்கிட பயன்படுகிறது. மேலும் இச்சங்கங்களின் மூலம் திரட்டப்படும் நன்கொடைத் தொகைக்கு அரசால் 1:1 என்ற விகிதாச்சாரத்தில் இணை மானியம் வழங்கப்படுகிறது. தற்போது, இவ்விகிதாச்சாரத்தை 1:2 என்ற விகிதத்தில் உயர்த்தியும், இவ்வுயர்வானது 1.4.2012–க்கு பின் பொருந்திடவும், மேலும் ஏற்கனவே வழங்கப்படும் ரூ.10.00 இலட்சத்தை ரூ.20.00 இலட்சம் என உயர்த்தியும் ஆணை வழங்குமாறு சிறுபான்மையின நல ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். இதன் மூலம் தற்போதுள்ள 31 மாவட்டங்களுக்கு ரூ.10.00 இலட்சம் வீதம் இணை மானியம் உயர்த்தி வழங்கிடும் பட்சத்தில் ரூ.3.10 கோடி கூடுதல் செலவினம் (சென்னை மாவட்டம் நீங்கலாக) ஏற்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

4. சிறுபான்மையின நல ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த பின் அதனை ஏற்று முஸ்லீம் மகளிர் உதவும் சங்கங்கள் மூலம் திரட்டப்படும் தொகைக்கு இணையாக அரசால் வழங்கப்படும் இணை மானியத் தொகையை 1:1 என்ற விகிதத்திற்கு பதிலாக 1:2 என்ற விகிதத்தில் உயர்த்தி வழங்கலாம் எனவும் இதனால் இணைமானியத் தொகை ரூ.10.00 இலட்சம் என்ற உச்ச வரம்பை ரூ.20.00 இலட்சம் என உயர்த்தி வழங்கிட அரசு ஆணையிடுவதுடன் இதனால் ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.3.20 கோடிக்கு (ரூபாய் மூன்று கோடியே இருபது இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கியும் ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை, கீழ்க்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :

> “2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூக பாதுகாப்பு, நலத்திட்டங்கள் – 200 – ஏனைய திட்டப்பணிகள் – I – திட்டத்தில் சேராதது – DF– முஸ்லீம் மகளிர் சங்கங்கள் – 09 – உதவித்தொகை – 01 – நடப்புச் செலவுக்கான உதவித்தொகை.” (து.தொ.கு.2235 60 200 DF 0915).

இது ஒரு புது துணைபணி குறித்த செலவினமாகும் நாளடைவில் இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படும். சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் கிடைக்கும் வகையில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வ.செ.பொது I) துறையில் தனியே வெளியிடப்படும். அதற்கான விண்ணப்பித்தினை உரிய படிவத்தில் பூர்த்தி செய்து நிதி (வ.செ.பொது I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு சிறுபான்மையின ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை 2012–2013 துணை மான்ய கோரிக்கையில்

சேர்த்திட உரிய விளக்கக் குறிப்பினை அரசுக்கு அனுப்புமாறும் மேலே பத்தி 4-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினைப் பெற்று சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் மூலம் முஸ்லீம் மகளிர் உதவும் சங்கங்களுக்கு வழங்கிடவும் சிறுபான்மையினர் நல ஆணையினருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

6.முஸ்லீம் மகளிர் சங்கங்களால் திரட்டப்பட்ட நிதி மற்றும் அரசு மானியம் ஆகியவற்றை மேற்கண்ட சங்கங்கள் இஸ்லாமிய மகளிர் நலத் திட்டங்களுக்குப் பயன்படுத்தியதற்கான பயன்பாட்டுச் சான்றை சிறுபான்மையினர் நலத் துறை ஆணையருக்கு அளிக்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்படுகிறது.

7.இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.16/கூ.செ, நாள் 01.08.2012–ல் இசைவு பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 847 ( எண்ணூற்று நாற்பத்தேழு)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**தங்க கலியபெருமாள்,**
**அரசு செயலாளர்**

பெறுநர்
ஆணையர், சிறுபான்மையினர் நலன், சென்னை–2
ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், சென்னை–5
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு) ,சென்னை–5
மாநிலக் கணக்காயர், சென்னை–6
மாநிலக் கணக்காயர், சென்னை–18
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்,
சென்னை–2
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
நகல்
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
மாண்புமிகு அமைச்சர் (நிதி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை–9
செயலர் அவர்களின் தனிச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்
நலத்துறை, சென்னை–9
நிதி (பிமிபி) (வ.செ.பொது I/வ.செ.பொது II) த்துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு / உபரி நகல்

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**